செய்தி வெளியீடு – 800 5–11–2009

# உலக வங்கித் திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழகம் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டுகிறது!

# முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்த உலக வங்கியின் இயக்குநர் திரு ராபர்டோ ஜகா பாராட்டு!

உலக வங்கியின் இயக்குநர் திரு. ராபர்டோ ஜகா (Roberto Zagha) அவர்கள் உலக வங்கி உதவியுடன் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்வதற்காகத் தமிழகத்திற்கு வருகைபுரிந்துள்ளார். இவர், இதற்குமுன் உலக வங்கியின் துணைத் தலைமையகத்தில் முதுநிலை ஆலோசகராகப் பணிபுரிந்து பொருளாதாரக் கொள்கைகள், வறுமை ஒழிப்புத் திட்டக் கொள்கைகள் ஆகியவற்றின் பொறுப்பு அதிகாரியாகவும் திகழ்ந்து நிறைந்த அனுபவம் வாய்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் தற்போது உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் 2160 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்;

1884 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம்;

1959 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சுனாமி பாதித்த பகுதிகளைச் சீரமைப்பதற்கான சுனாமி அவசரகால மறுசீரமைப்புத் திட்டம்;

2 ஆயிரத்து 547 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பொதுப்பணித்துறை, வேளாண்மை மற்றும் வேளாண் பொறியியல் துறை, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை, ஆகிய துறைகளின் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சிகளான நீர்வள – நிலவளத் திட்டம்;

493 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 29 மாவட்ட தலைமையிட மருத்துவமனைகள் 241 வட்ட மருத்துவமனைகள் ஆகியவற்றின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டம்;

717 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான "வாழ்ந்து காட்டுவோம் திட்டம்" – ஆக மொத்தம் 9 ஆயிரத்து 760 கோடி ரூபாய் நிதியுதவியில் செயல்படுத்தப்பட்டுவரும் 6 திட்டங்களின் செயலாக்கத்தைப் பார்வையிடுவதற்காகத் தமிழகத்திற்கு வருகை புரிந்துள்ள நிலையில் முதலமைச்சர் கலைஞர் அவர்களைத் திரு. ராபர்டோ ஜகா அவர்கள் இன்று (5.11.2009) சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 242 கோடி ரூபாயும், தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டத்தின்கீழ் 572 கோடியே 62 இலட்ச ரூபாய்; "வாழ்ந்து காட்டுவோம்" திட்டத்திற்கு 950 கோடி ரூபாயும் உலக வங்கியிடம் கூடுதலாக ஏற்கனவே நிதி கோரப்பட்டுள்ளது என்பதனை நினைவுபடுத்தி, இந்நிதியைத் தமிழகத்திற்கு விரைவில் அனுமதித்திட உதவி புரிந்திடுமாறும், உலக வங்கியின் இயக்குநர் திரு. ராபர்டோ ஜகா அவர்களிடம் வற்புறுத்திய முதலமைச்சர் கலைஞர், பல ஆண்டுகளுக்கு முன்னர் உலக வங்கி ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்திற்கு **(Integrated Nutrition Project)** நிதி உதவி அளித்ததை நினைவு கூர்ந்ததுடன், தற்போது சத்துணவுத்

திட்டத்தில் குழந்தைகளுக்கும், மாணவ மாணவிகளுக்கும் வாரத்திற்கு மூன்று முட்டைகளும், முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழங்களும் வழங்கப்படுகின்றன என்றும் தெரிவித்தார்.

மேலும், ஏழைப் பெண்களுக்குத் திருமண நிதி உதவி வழங்கும் “மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித் திட்டம்” தமிழகத்தில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்ட உதவிகள் இலங்கையிலிருந்து வந்துள்ள தமிழ்ப் பெண்களுக்கும் வழங்கப்படுகிறது என்றும்;

காலங்காலமாக நீடித்து வந்த ஓர் அவலமாகிய, மனிதக் கழிவை மனிதர்களே அகற்றும் கொடுமையை ஒழிப்பதில் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்றும்;

மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாக இந்திய நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனினும் தமிழகம் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்றும்;

தமிழக அரசு மேற்கொண்ட சீரிய முயற்சிகளின் பயனாக, சுனாமி அவசர கால மறு சீரமைப்புத் திட்டத்தின் கீழ், தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் 17 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கு அண்மையில் உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்றும் முதலமைச்சர் கலைஞர் கூறினார்.

தொடர்ந்து உலக வங்கி இயக்குநரிடம் உரையாடியபோது, தமிழகத்தில் வீட்டு வசதிகளை, முக்கியமாக கிராமப்புறங்களில் மேம்படுத்துதல், சாலை வசதிகளை மேம்படுத்துதல், சுகாதார வசதிகளை அதிகப்படுத்துதல், பாதாள சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்றுதல் போன்ற திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதி உதவிகளை உலக வங்கி வழங்கிட வேண்டும் என்றும் முதலமைச்சர் கலைஞர் கேட்டுக் கொண்டார்.

அத்துடன், நீர்ப்பாசன வசதிகளைப் பொறுத்தவரையில், மாநிலங்களுக்கிடையில் அடிக்கடி ஏற்பட்டு வரும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தேசிய அளவில் நதிநீர் இணைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்பதை வலிறுத்திய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாநிலங்களுக்கிடையே ஏற்படும் சர்ச்சைகளைத் தீர்க்கும் வகையில் நதிநீர் இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றிட விரைவான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் கலைஞர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் முடிவில், உலக வங்கியின் இயக்குநர் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் உலக வங்கித் திட்டங்களைச் செம்மையாக நடைமுறைப் படுத்துவதில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கெல்லாம் ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது என்று பெருமையுடன் கூறியதுடன், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடன் ஏற்பட்ட இந்தச் சந்திப்பு தமக்கு மிகுந்த மரியாதையையும், மகிழ்ச்சியையும் அளித்ததாகத் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின், தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.கு. ஞானதேசிகன்,இ.ஆ.ப.,ஆகியோர் உடனிருந்தனர்.

********************************************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.